சுற்றறிக்கை இலக்கம்: 05/2005

எனது இலக்கம்: எம் 10/பல/19

2005.05 .12

அனைத்துப் பிரதேச செயலாளர்கள் /

மேலதிக மாவட்டப் பதிவாளர்கள்,

**சிதைவடைந்த பிறப்பு, விவாக மற்றும் இறப்புப் பதிவேடுகளின் மூலப் பிரதிகளுக்குப் பதிலாக மத்திய ஆவணக்காப்பகத்திலிருந்து பிரதிகளைப் பெற்றுக்கொள்ளல்**

---

தங்கள் அலுவலகத்திலுள்ள பிறப்பு, விவாக மற்றும் இறப்புப் பதிவேடுகளுக்குரிய மூலப் பிரதிகள் சிதைவடைந்திருக்கும் அல்லது காணாமறற்போயிருக்கும் சந்தர்ப்பங்களில், தங்களது கோரிக்கைக்கு இணங்க இவ்வலுவலகத்தின் மத்திய ஆவணக்காப்பகத்தின் மூலம் பின்வரும் ஆவணங்கள் வழங்கப்படுகின்றன:

1. அதிகாரம் 110 பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுச் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் கீழான பிரதிகள்.
2. அதிகாரம் 112 பொது விவாகப் பதிவுச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவின் கீழான பிரதிகள்.
3. அதிகாரம் 113 கண்டி விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழான பிரதிகள்.
4. அதிகாரம் 115 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழான பிரதிகள்.

02. இந்தப் பிரதிகள் தங்களுக்குக் கிடைத்தவுடன், அவற்றைக் கொண்டு விண்ணப்பதாரர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்கிய போதிலும், மத்திய ஆவணக்காப்பகத்திலிருந்து பெறப்பட்ட அப் பிரதிகளை உரிய பதிவேட்டுத் தொகுதிகளுடன் இணைப்பதில்லை என அறியக்கிடைக்கின்றது. அவ்வாறு பதிவேட்டுத் தொகுதிகளுடன் இணைக்கப்படாத காரணத்தினால், அதே விண்ணப்பதாரர்கள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளைக் கோரும்போது, மறுபடியும் மத்திய ஆவணக்காப்பகத்திலிருந்து பிரதிகளைத் தருவிப்பதற்கு நேரிடுகிறது. இதனால் தங்கள் அலுவலகத்திலும் மத்திய ஆவணக்காப்பகத்திலும் தேவையற்ற வேலைப்பளு அதிகரிப்பதோடு பொதுமக்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

03. எனவே, மத்திய ஆவணக்காப்பகத்திலிருந்து பிறப்பு, விவாக மற்றும் இறப்பு உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் தங்கள் அலுவலகத்திற்குக் கிடைத்தவுடன், அவற்றை உரிய பதிவேட்டுத் தொகுதிகளுடன் இணைப்பதற்கும், முழுமையான தொகுதி சிதைவடைந்திருந்தால் அவற்றைப் பாதுகாப்பான உறையிலிட்டு உரிய ஆவணக் காப்பறையில் வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஒப்பம்)

பதிவாளர் நாயகம்

பிரதிகள்:

1. அனைத்து மாவட்டச் செயலாளர்கள் / மேலதிக பதிவாளர் நாயகங்கள்
2. வலய உதவி பதிவாளர் நாயகங்கள்
3. அனைத்து காணிப் பதிவாளர்கள் மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள்
4. கா.ப மற்றும் மே.மா.ப உள்ளக தணிக்கைப் பிரிவு